E.P.91/2025
in
O.S.No. 11/2020
தேதி. 27.10.2025

உத்தரவு பகரப்பட்டது.

மனுதாரர்/வாதி இம்மனுவை கட்டளை 21 விதி 54, 66 உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டத்தின் கீழ் தீர்ப்பாணை படி மனுச்சொத்தை ஏல விற்பனை மூலம் விற்பனை செய்து மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய தொகையை வசூலித்து பெறுவதற்காக தாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. எதிருரை தாக்கல் செய்யப்பட்டது.

3) இருதரப்பும் கேட்கப்பட்டது, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

4) இம்மனுதாரர் அசல் வழக்கின் வாதி. அசல் வழக்கில் 07.01.2021ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதன் படி மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து ரூ.5,39,000/–த்தை வட்டியுடன் திரும்ப பெற உரிமையுடையவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையை வசூலிக்க மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ள நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே மனுச் சொத்தின் மீது வில்லங்கம் இருப்பதாகவும், அதில் எதிர்மனுதாரின் தந்தையின் வீடும் இருப்பதாகவும், ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) பொதுவாக, நீதிமன்றங்கள் தீர்ப்பாணை பெற்றவர் தாக்கல் செய்யும் நிறைவேற்று மனுவை அனுமதித்து தீர்ப்பாணையின் பலனை அவர் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தாவாச் சொத்தில் Five Star Finance நிறுவனத்திற்கு வில்லங்கம் இருந்தால் அவர்களும், அதன் மீது நடவடிக்கை எடுத்து கொள்ளலாம். அதனால் மட்டுமே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என கூறிவிட முடியாது. மேலும், எதிர்மனுதாரர் தந்தையின் வீடு மனுச்சொத்தில் உள்ளதை காட்ட எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, இம்மனுவை அனுமதிக்கலாமென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

Attach by Batta within 3 days Call on 01.12.2025.

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்.